. 4 பக்கங்கள் . விலை ரூ. 5





# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936





www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 20.03.2026 • மலர் 04 • இதழ்: 78 • Edition : Nagercoil • 20.03.2026 • Vol : 04 • Issue : 78 • Page : 4 • Rs. 5/-

## தமிழ்நாட்டிற்கு

# 5 தலைநகரங்கள்; அனைவருக்கு அரசு வேலை

## சீமான் அதிரடி அறிவிப்பு

சென்னை, மார்ச். 20

நாம் தமிழர் கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான். அதன் விபரம் வருமாறு:

தமிழகத்தின் மையப் புள்ளியான திருச்சி முதன்மை நிர்வாக மையமாகச் செயல்படும். தென் மாவட்ட மக்களும், வட மாவட்ட மக்களும் ஒரே நாளில் வந்து செல்லக்கூடிய மையமாக இது இருக்கும்.

முதலமைச்சர் அலுவலகம் மற்றும் அனைத்துத் துறை அமைச்சகங்கள்.

L (Legislative Assembly):

மாநிலத்தின் சட்டமியற்றும் பணிகள்.

வருவாய்த்துறை மற்றும் பொது நிர்வாகம்:

மாநிலத்தின்38மாவட்டங்களையும் கண்காணிக்கும் மையம்.

மாநிலத் திட்டக் குழு: ஒட்டுமொத்தத் தமிழகத்தின் வளர்ச்சிக்கான திட்டமிடல்.

சென்னை: தொழில்நுட்பத் தலைநகரம் (Tech Capital)

இந்தியாவின்மும்பை, சீனாவின் ஷாங்காய் போல. சென்னை தனது நிருவாகப் பளுவைக் குறைத்துக் கொண்டு, கல்வி, பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின்நுழைவாயிலாக இருக்கும்.

தகவல் தொழில்நுட்பம் (IT):

கணினித் தொழில்நுட்பம் மற்றும் மென்பொருள் ஏற்றுமதி.

திரைக்கலை மற்றும் ஊடகம்:

கலை மற்றும் பொழுதுபோக்குத் துறையின் தலைமையகம்.

துறைமுகம் மற்றும் கடல்சார் வணிகம்:

சர்வதேச வர்த்தகப் போக்குவரத்து.

நிதி மற்றும் வங்கிச் சேவைகள்:

மாநிலத்தின் முக்கிய நிதி நிறுவனங்கள்.

மாநிலத்தின் முக்கிய நிதி நிறுவனங்கள்.

கோவை: தொழில் மற்றும் வணிகத்தலைநகரம் (Industrial & Business Capital)

ஜெர்மனியின் ஃபிராங்க்பர்ட் அல்லது இத்தாலியின் மிலன் நகரம் போல, கோவை மாநிலத்தின் உற்பத்தித் துறையின் முதுகெலும்பாகச் செயல்படும்.

மேற்கு மண்டலத்தின் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கவும், சிறுகுறு தொழில்களை (MSME) உலகத் தரத்திற்கு உயர்த்தவும் இது உதவும்.

தொழில் மற்றும் வர்த்தகத்துறை:

புதிய தொழிற்சாலைகளுக்கான அனுமதி மற்றும் மேலாண்மை.

நெசவு:

திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட நெசவு மண்டலங்களின் ஒருங்கிணைப்பு.

தொழிற்பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு:

இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புப் பயிற்சி மையங்கள்.

தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்: புதிய நிறுவனங்களை உருவாக்குதல்.

மதுரை: மொழி, கலை மற்றும் பண்பாட்டுத் தலைநகரம் (Cultural & Heritage Capital)

ஜப்பானின் கியோட்டோ நகரம் அதன் பண்பாட்டினைப் பிரதிபலிப்பது போல. மதுரையும் தமிழின் அடையாளம் மற்றும் நீதிக்கான மையமாகத் திகழும்.

தமிழர்களின் தொன்மையான வரலாறு மற்றும் கலைகளைப் பாதுகாக்கும் உலகளாவிய மையமாக இது விளங்கும்.

தமிழ் வளர்ச்சித்துறை: தமிழ் மொழி ஆய்வு மற்றும் உலகத் தமிழ் சங்கப் பணிகள்.



சுற்றுலா மற்றும் பாரம்பரியம்:

மரபுசார் மற்றும் வரலாற்றுச் சுற்றுலா மேம்பாடு.

நாட்டுப்புறக் கலைகள் மற்றும் நுண்கலைகளின் பாதுகாப்பு.

கன்னியாகுமரி: தமிழர் மெய்யியல் தலைநகரம் (Epistemological Capital)

இந்தியாவின் தென் கோடியில்அமைந்துள்ள குமரி, மாநிலத்தின் தொலைநோக்குச் சிந்தனை மற்றும் இயற்கை வளப் பாதுகாப்பிற்கான மையமாக இருக்கும்.

தமிழரின் மெய்யியல் மற்றும் உலகெங்கும் வாழும் தமிழர்களை இணைக்கும் ஒரு அடையாளப் புள்ளியாக இது விளங்கும்.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்:

கடல்சார் சுற்றுச்சூழல் மற்றும் கடற்கரை மேலாண்மை.

வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை:

புலம்பெயர்ந்த தமிழர்களுடனான உறவை மேம்படுத்துதல்.

சிந்தனை மற்றும் தத்துவ மையம்:

வள்ளுவம் உள்ளிட்ட தமிழர் அறநெறிகளை உலகிற்குக் கொண்டு சேர்த்தல்.

பெண்களுக்குத் தனித்தொகுதி

உள்ளாட்சி அமைப்பில் பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சட்டமன்ற நாடாளுமன்றத் தொகுதிகளில் அப்படி வழங்கப்படவில்லை. ஒரு பெண் வேட்பாளர் போட்டியிடும் தொகுதியில் மற்ற கட்சிகளும் பெண் வேட்பாளரை நிறுத்துவதில்லை. இதனால் பெண்களுக்கான உரிமையும் பறிக்கப்படுகிறது. எனவே பெண்களுக்குச் சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் (பட்டியலினத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதைப் போல்) தனித் தொகுதிகள் போராடிப் பெறப்படும். இதனால் பட்டியலின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகப் பெண்களுக்கான நிகர்நிலைக்கிடைக்கும்.

நாம் தமிழர் கட்சியின் தேர்தல் அறிக்கை முக்கிய அறிவிப்புகள்

★ சென்னை, திருச்சி, மதுரை, கோவை, கன்னியாகுமரி என 5 தலைநகரங்கள்

★ 60 வயதிற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு ஒய்வூதியம்

★படிப்படியாகஓராண்டிற்குள் மதுக்கடைகள் மூடப்படும்

★ இடஒதுக்கீட்டில் தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் வகையில் மாற்றம் கொண்டுவரப்படும்

மாணவர்களின் கல்விக் கடன் முற்றிலும் ரத்து செய்யப்படும்

★ ஆற்றுநீரை பயன்படுத்தும் குளிர்பான ஆலைகளுக்குத் தடை

★ குடிநீர் விற்பனை தடுக்கப்பட்டு அனைவருக்கும் இலவச குடிநீர்

★ ஆங்கில மருத்துவம் தமிழ் வழியில் நடத்தப்படும்

★ பாரதிதாசனின் "வாழ்வினில் செம்மையை..." பாடலே தமிழ்த்தாய் வாழ்த்தாக் கப்படும்

49 தலைப்புகளில்462 பக்க தேர்தல் அறிக்கையை வெளியிட்டார் நாம் தமிழர் கட்சியின் தலைமைஒருங்கிணைப்பாளர் சீமான்.




## சீனாவுக்கான இந்திய தூதராக விக்ரம் துரைசாமி நியமனம்



புதுடெல்லி,

சீனாவுக்கான இந்திய தூதராக தற்போது இங்கிலாந்துக்கான இந்திய தூதராக பணியாற்றி வரும் வி க்ரம் துரைசாமி நியமிக்கப்படுவதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிவித்து உள்ளது. அவர் விரைவில் பதவி ஏற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது சீனாவுக்கான இந்திய தூதராக உள்ள பிரதீப் குமார் ராவத்திற்கு பதிலாக துரைசாமி நியமிக்கப்பட்டுள்ளார். விக்ரம் துரைசாமி, தூதரக துறையில் மிகுந்த அனுபவம் கொண்டவர். அவர் பல முக்கிய தூதரக பொறுப்புகளை வகித்து உள்ளார்.

## கனிமொழி டெல்லி செல்லும் போது இ.பி.எஸ் செல்ல கூடாதா? தமிழிசை சவுந்தரராஜன் கேள்வி

சென்னை, மார்ச். 20

தமிழக முன்னாள் பாஜக தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் சென்னையில் செய்தியாளர்களை சந்தித்து பேசியதாவது:

இ.பி.எஸ். இன்று காலை டெல்லி சென்றது குறித்து தமிழிசையிடம் செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு, கூட்டணி கட்சியில் உள்ள தலைவரை சந்திப்பதற்கு இ.பி. எஸ் டெல்லி சென்றிருக்கிறார். அவர் டெல்லி சென்றாலே ஏதும் குழப்பம் தான் என்று ஏன் எடுக்கிறீர்கள் என்று தமிழிசை கூறினார்.

தமிழகத்தில் ஒருதலைவர்கூட்டணியில் உள்ள தலைவரை சந்திக்க டெல்லி சென்றால் அது குழப்பம். ஆனால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கடந்த முறை ஆறு தொகுதியில் போட்டியிட்டு இந்த முறை திமுக கூட்டணியில் ஐந்து இடங்கள் கொடுக்கப்பட்டிருப்பது அழுத்தம் கிடையாது. மதிமுகவும் கடந்த முறை ஆறு தொகுதியில் போட்டியிட்டு இந்த முறை அழுத்தத்தின் காரணமாக நான்கு தொகுதிகள் திமுக கொடுத்திருப்பது அழுத்தம் கிடையாதாம்.

ஆனால் அந்த கூட்டணியில் எந்த அழுத்தமும், குழப்பமும் இல்லையாம், பாஜக என்னும் பூச்சாண்டியை காட்டி நீங்கள் அடிமைத்தனமாக தொகுதிகளை குறைத்து வாங்கி விட்டு நாங்கள் கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்ட வில்லை என்று திமுக கூட்டணியில் உள்ள கட்சியினர் கூறி வருகின்றனர். திமுக கூட்டணியில் உள்ள கட்சிகள் திமுகவின் உதயசூரியன் சின்னத்தில் தான் போட்டியிட வேண்டும் என்று அழுத்தத்திற்கு தள்ளப்படுகிறார்கள். திமுகவின் கூட்டணி கட்சிகள் பாஜகவை காண்பித்து தான் தனது கூட்டணி பகிர்வை பெறுகிறார்கள்.

கனிமொழியும் டெல்லியில் ராகுல் காந்தியை ஏன் பார்த்தார்கள்? அமித்ஷா தமிழகத்திற்கு வந்து இங்குள்ள கூட்டணி கட்சி தலைவர்களை சந்திக்கிறார். மோடிஜியும் தமிழகம் வந்து ஒரே மேடையில் கூட்டணி கட்சி தலைவர்களுடன் இருக்கிறார். மாநில கட்சியில் உள்ள ஒருவர் தேசிய கட்சியில் உள்ள ஒருவரை நிர்வாக ரீதியாக நட்பு ரீதியாக சந்திப்பதில் என்ன தவறு இருக்கிறது.

இவ்வாறு அவர் பேசியுள்ளார்.

### 2024ஆம் ஆண்டில்

## 19,965 தற்கொலைகள்:71சதவீதம் மது, கஞ்சா போதையே காரணம்

### அன்புமணி கண்டனம்



சென்னை, மார்ச். 20

பா.ம.க. தலைவர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டில் 2024ஆம் ஆண்டில் 19,965 பேர் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனர். அவற்றில் 71% தற்கொலைகளுக்கு ஏதோ ஒரு வகையில் கட்டுப்படுத்தப்படாத மது மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பழக்கம் தான் காரணம் என்று திமுக அரசு வெளியிட்ட கொள்கை ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மதுவை, கஞ்சாஉள்ளிட்டபோதைப் பொருள்களையும் கட்டுப்படுத்தத் தவறியதன் மூலம் தற்கொலைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு கஞ்சா திமுக அரசு காரணமாக இருந்திருப்பது கண்டிக்கத்தக்கது ஆகும்.

தற்கொலைகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்காக பள்ளிகள், கல்லூரிகள் உள்ளிட்ட அனைத்து வகையான கல்வி நிறுவனங்களிலும் ஒரே மாதிரியான மனநலக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கடந்த 25.07.2025ஆம் நாள் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. அதனடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள கல்வி நிறுவனங்களில் நடைமுறைப்படுத்துவதற்கான மனநலக் கொள்கையை தமிழக அரசின் சுகாதாரத் துறை கடந்த 6ஆம் தேதி வெளியிட்டுள்ளது. அதில் இடம்பெற்றுள்ள தற்கொலைகள் மற்றும் அதற்கான காரணங்கள் குறித்த தகவல்கள் அதிர்ச்சியூட்டுபவையாக உள்ளன.

தமிழ்நாடு மாநில குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி 2024ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் 19,965 தற்கொலைகள் நிகழ்ந்துள்ளன. தற்கொலை செய்து கொண்டவர்களில் 76சதவீதம் அதாவது 14,770 பேர் ஆண்கள், 26சதவீதம் அதாவது 5171 பேர் பெண்கள், மீதமுள்ள 24 பேர் திருநங்கையர் ஆவர்.

தமிழ்நாட்டில் மது மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களுக்கு அடிமையானது தான் 12% அதாவது 2396 பேரின் தற்கொலைகளுக்கு காரணம் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மதுவால் ஏற்படும் பாதிப்புகள் இத்துடன் நிற்கவில்லை. 7786 பேரின், அதாவது 39 விழுக்காட்டினரின் தற்கொலைகளுக்கு குடும்பப் பிரச்சினைகளும், 2196 பேரின் (11சதவீதம்) தற்கொலைகளுக்கு தீராத வயிற்றுவலியும், 998 பேரின் (5சதவீதம்) தற்கொலைகளுக்கு மனநோயும், 798 (4சதவீதம்) பேரின் தற்கொலைகளுக்கு கடன் தொல்லையும் காரணம், என்று தமிழக அரசு தெரிவித்திருக்கிறது. இவை அனைத்தும் மது மற்றும் கஞ்சாஉள்ளிட்டபோதைப் பொருள்பழக்கத்தால் ஏற்படும் பக்கவிளைவுகள் தான். அந்த வகையில் தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் தற்கொலைகளில் 71 விழுக்காடு, அதாவது 14,175 பேரின் தற்கொலைகளுக்கு மதுவும், கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்களும் தான் ஏதோ ஒரு வகையில் காரணமாக இருக்கின்றன.

அதுமட்டுமின்றி, மனிதர்களுக்கு பல வகையான புற்றுநோய்கள் உள்ளிட்ட 200 வகையான நோய்கள் ஏற்படுவதற்கு மது தான் காரணமாக இருக்கிறது. மது குடிப்பதால் ஏற்படும் நோய்களின் காரணமாக மட்டும் தமிழ்நாட்டில் ஆண்டுக்கு 2 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர். 2021 முதல் இப்போது வரையிலான ஐந்தாண்டு திமுக ஆட்சியில் மட்டும் தமிழ்நாட்டில் 10 லட்சம் பேர் மதுவால் ஏற்பட்ட நோய்களுக்கு பலியாகியுள்ளனர்.

தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்ட புள்ளிவிவரங்களின்படி கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக தேசிய அளவில் அதிக தற்கொலை நிகழும் மாநிலங்களில் தமிழ்நாடு தான் முதலிடம் அல்லது இரண்டாவது இடத்தில் இருந்து வருகிறது. அதிக சாலை விபத்துகள் நிகழும் மாநிலமாகவும் தமிழ்நாடு தான் திகழ்கிறது. இதற்கெல்லாம் முதன்மைக் காரணம் மது மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள் தான் என்பதை பாட்டாளி மக்கள் கட்சி நன்றாக அறியும். இதைக் கருத்தில் கொண்டு தான் போதைப்பொருள் ஒழிப்புக்காக பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து போராடி வருகிறது. உச்சநீதிமன்றம் வரை சென்று சட்டப்போராட்டம் நடத்தி தமிழ்நாட்டில் 3321 மதுக்கடைகள் உள்பட நாடு முழுவதும் 90 ஆயிரம் மதுக்கடைகளை மூட வைத்ததும் மதுவின் தீமைகளை ஒழிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் தான்.

ஆனால், எதிர்க்கட்சியான பாட்டாளி மக்கள் கட்சிக்கு உள்ள பொறுப்புணர்வில் ஒரு விழுக்காடு கூட தமிழகத்தை ஆளும் திமுக அரசுக்கு இல்லாததால் தான் தமிழ்நாடு தற்கொலைகளின் பூமியாக தொடர்ந்து வருகிறது.

தமிழ்நாட்டில் மதுவிலக்கை நடைமுறைப்படுத்தப் போவதாக வாக்குறுதி அளித்த திமுக, வெறும் 500 மதுக்கடைகளை மட்டும் மூடிவிட்டு1200க்கும் மேற்பட்ட மனமகிழ் மன்றங்களைத் திறந்து தெருக்கள் தோறும் 24 மணி நேரமும் மதுவை வெள்ளமாக ஓட விட்டுக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமின்றி, தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 11 மது ஆலைகளில் 5 மது ஆலைகள் 200611 திமுக ஆட்சியில் அனுமதி அளிக்கப்பட்டவை; இவற்றில் 6 மது ஆலைகள்திமுகவுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புடையவை. அதே போல், 7 பீர் ஆலைகளில் 4 ஆலைகள் திமுக ஆட்சியில் அனுமதிக்கப்பட்டவை. அவை அனைத்தும் திமுகவுடன் தொடர்புடையவை ஆகும். திமுகவுடன் தொடர்புடையவர்கள் நடத்தும் மது ஆலைகள் மட்டும் மூடப்பட்டால், தமிழ்நாட்டில் மதுவால் ஏற்படும் உயிரிழப்புகள், தற்கொலைகளில் 60 விழுக்காட்டை குறைத்து விட முடியும். ஆனால், மதுவைக் கொடுத்து மக்களை சீரழிக்கும் திமுக அதை மட்டும் செய்யாது.

அதேபோல், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களில் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும்படி பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தியும் அதற்காக திமுக அரசு எதையும் செய்யவில்லை. மாறாக, திமுகவின் முன்னணி நிர்வாகிகளே மிகப் பெரிய அளவில் போதைப்பொருள்கள் கடத்தலில் சிக்கி கைதாகியுள்ளனர். இப்படியாக எந்த வகையில் பார்த்தாலும் கொலைகள், தற்கொலைகள், உயிரிழப்புகள் ஏற்படுவதற்கு மது மற்றும் கஞ்சா போதையைக் கட்டுப்படுத்தத் தவறிய திமுக அரசு தான் காரணம். சமூகத்தை திட்டமிட்டு சீரழித்த திமுகவுக்கு வரும் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் மறக்க முடியாத பாடத்தைப் புகட்டுவது உறுதி.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

### போதைப் பொருள் பற்றிய விழிப்புணர்வு

# ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரிக்கு மாவட்ட அளவில் முதல் பரிசு



ஈரோடு மார்ச் 20

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் மாணவர்தன்னார்வலர்கள் மாணவர்களிடமும் பொது மக்களிடமும் போதைப் பழக்கத்தினால் ஏற்படும் பாதிப்புகளையும் அதிலிருந்து மீண்டு வருவதற்கான நடைமுறைகளையும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் வாயிலாக ஏற்படுத்தினர்.

அதன் பொருட்டு துண்டு பிரசுரங்கள் விநியோகித்தல், வீதி நாடகங்கள் நிகழ்த்துதல், பேரணிகள் செல்லுதல் என பல்வேறு தளங்களில் பல்வேறு முறைகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தி சமூக மேம்பாட்டிற்கான பணியை மேற்கொண்டதற்காக மாவட்ட அளவில் முதல் பரிசு கிடைத்துள்ளது. இதனைப் பாராட்டும் விதமாக ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விருதுகள் வழங்கும் விழாவில் மாவட்ட ஆட்சியர் கந்தசாமி மாணவர்தன்னார்வலர்களை வாழ்த்தி விருது வழங்க, கல்லூரியின் சார்பில் முதல்வர் முனைவர் வாசுதேவன் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு அமைப்பு உள்ளிட்ட அமைப்புகளின் ஒருங்கிணைப்பாளர்கள் விருதினைப் பெற்றுக்கொண்டனர்.

கல்லூரியின் போதைப்பொருள் ஒழிப்பு அமைப்பு, நாட்டு நலப்பணி திட்டம், தேசிய மாணவர் படை, இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செஞ்சுருள் சங்கம் ஆகிய அமைப்புகள் போதைப்பொருள்ஒழிப்புவிழிப்புணர்வு செயல்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பரிசு பெற காரணமாக இருந்த அனைவரையும் கல்லூரியின்தாளாளர்சச்சிதானந்தன் பாராட்டினார்.

### நாகர்கோவிலில்

# கிம்ஸ் ஹெல்த் மருத்துவமனையில் இப்தார் விருந்து: ஏராளமானோர் பங்கேற்பு




நாகர்கோவில், மார்ச் 20

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் கிம்ஸ் ஹெல்த் மருத்தவமனையில் சிறப்பாக நடைபெற்ற 2026– இப்தார் விருந்தில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

சுங்காங்கடை பகுதியில் அமைந்துள்ள கிம்ஸ் ஹெல்த் நாகர்கோவில் மருத்துவமனையில் வைத்து இப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது. கிம்ஸ் ஹெல்த் குழும தலைவர் டாக்டர் எம்.ஐ. சஹதுல்லா சிறப்பு உரையாற்றினார். நிகழ்ச்சியில் பெருவிளைஜும்மா மசூதி இமாம் முகமது ஹசன் ஆலிம், மலங்கரை கத்தோலிக்க மறைமாவட்ட ஆயர் டாக்டர் வின்சென்ட் மார்பௌலோஸ், பிரம்மகுமாரிகள் ராஜயோகினி பி.கே. கோகிலா சகோதரி, நாகர்கோவில் மேயர் வழக்கறிஞர் மகேஷ், முன்னாள் அமைச்சர்தளவாய் சுந்தரம் எம்.எல்.ஏ., வில்லுக்குறிபேரூராட்சிதலைவர்விஜயலெக்ஷ்மி, இந்திய ஓய்வுபெற்றஅஞ்சல் சேவை (IPoS) அதிகாரியும்திருவனந்தபுரம் டெக்னோ பார்க் முன்னாள் தலைமை செயல் அதிகாரியுமான திரு . மெர்வின் அலெக்சாண்டர், டாக்டர் தனேஷ் ராஜ மாணிக்கம் மற்றும் கிம்ஸ் ஹெல்த் நாகர்கோவில் ஆலோசனை குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இந்த இப்தார் நிகழ்ச்சியில் அரசியல் தலைவர்கள்,

அரசு அதிகாரிகள், சமூக சேவகர்கள், மதத் தலைவர்கள், கிம்ஸ் ஹெல்த் திருவனந்தபுரம் மேலாண்மை குழு உறுப்பினர்கள் மற்றும் கிம்ஸ் ஹெல்த் நாகர்கோவில் பணியாளர்கள் உட்பட 650க்கும் மேற்பட்ட அழைப்பிதழ் பெற்ற விருந்தினர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்குப் பிறகு அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

# இட ஒதுக்கீட்டிற்கு எதிரான ஒப்பந்த பணியாளர்கள் திட்டத்தை ஒழிப்போம்

## ஓ.பி.சி மக்கள் கட்சி தலைவர் இரத்தினசபாபதி பேட்டி




சென்னை, மார்ச் 20

ஓ பி சி மக்கள் உரிமை கட்சியின் செய்தியாளர்கள் சந்திப்பு அதன் தலைவர் இரத்தின சபாபதி தலைமையில் சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் நடைபெற்றது .

இதில் ஓபிசி மக்கள் கட்சியின் தலைவர் இரத்தினசபாபதி செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது: தேசிய கட்களும் மாநில கட்சிகளும் 70 சதவீத்திற்கும் அதிகமாக உள்ள இதற பிற்படுத்தப்பட்டோர் பிரிவினரின் உழைப்பை உறிஞ்சி கொண்டு துரேகங்களை இழைத்து வருகின்றது. ஆனால் நாடு சுதந்திரம் பெற்று 75ஆண்டுகளாகியும் இப் பட்டியலில் உள்ள மக்களின் மக்கள் எந்தவித வேலை வாய்ப்பையும் முன்னேற்றத்தையும் adayavillai . ஆகவே தான் ஓபிசி மக்கள் உரிமை கட்சி கீழ்க்கண்ட நோக்கங்களை அடிப்படையாக கொண்டு அரசியல் களத்துக்கு வருகிறது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு தரமான கல்வி, கல்வி உதவித்தொகை, வட்டியில்லா கல்வி கடன், நிரந்தர வேலை வாய்ப்புகள், விவசாயம் , சிறு தொழில் செய்வதற்கு அரசு உதவிகள், மானியங்கள் உற்பத்தி பொருட்களுக்கு உரிய விலை,ஊழல் இல்லாத கடமை உணர்வுடன் கூடிய மக்கள் பிரதிநிதிகள்,அரசு பணியாளர்களை உருவாக்குதல் , குறிப்பாக ஒப்பந்த தொழிலாளர்கள் திட்டத்தை ஒழிப்பது, இதன் மூலம் இடஒதுக்கீட்டின் இருப்பை உறுதி செய்வது என்ற கொள்கையுடன் எங்கள் பாப்புரையுடன் ஒவ்வொரு குடும்பத்தையும் நேரில் சந்தித்து மக்களிடம் மாற்றத்தை உருவாக்குவோம். தேசிய, மாநில அளவில் ஆண்ட, கட்சிகளுக்கு மாற்றாக செயல்படுவோம் என்று அவர் தெரிவித்தார்.




திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளதையொட்டி, பொதுமக்களிடையே 100 சதவீத வாக்குப் பதிவு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக "ஜனநாயக திருவிழா" "என் வாக்கு என் உரிமை" என்ற விழிப்புணர்வு பதாகைகளுடன் கூடிய இரு சக்கர வாகன பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் திருமதி.க.சிவசௌந்திரவல்லி. இ.ஆ.ப., அவர்கள் (19.03.2026) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.



திருப்பூர் 114 தெற்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் திரு.எம்.பி.அமித் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் (18.03.2026) டவுன்ஹாலில் உள்ள S.R.C ரங்கசாமி செட்டியார் மாநாட்டு அரங்கத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்2026 முன்னிட்டு மூத்தகுடியினர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான தபால் வாக்கு 12D படிவம் நிரப்புவது மற்றும் வழங்குவது குறித்து மண்டல அலுவலர்கள், உதவி மண்டல அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்புநடைபெற்றது. உடன் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் துணை ஆணையாளர் திரு.சுந்தரராஜன், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் உதவி ஆணையாளர் திரு. பார்த்தசாரதி (மண்டலம்3)உதவி ஆணையாளர்கள் திரு.ராஜசேகர்பொது(பொ), திரு. குமரன் (மண்டலம்4), தேர்தல் துணை வட்டாட்சியர் திரு. மேகநாதன், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# வெறுப்பு பேச்சுகள் குற்றங்களுக்கு எதிராக தமிழ்நாட்டில் சட்டம் இயற்றப்பட வேண்டும்

## காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற கோரிக்கை கடிதம் அளிப்பு




கோவை மார்ச் 20

கர்நாடக காங்கிரஸ் அரசு அண்மையில் (டிசம்பர் 2025) *Hate Speech* மற்றும் *Hate Crimes*ஐ தடுக்கும் சட்டத்தை (*Karnataka Hate Speech and Hate Crimes (Prevention) Bill, 2025*) நிறைவேற்றியது. இதுபோன்ற ஒரு வலுவான சட்டத்தை தமிழ் நாட்டிலும் கொண்டு வர வேண்டும் என்று கோரி காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் (*Manifesto*)

இதை உறுதியாக இடம் பெறச்செய்யவேண்டும்என்றகோரிக்கை கடிதத்தை காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை ( *Election Manifesto*) குழுவில் நிரந்தர அழைப்பாளராக (*Permanent Invitee*) இடம்பெற்றுள்ள அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தேசிய செயலாளரும் (*National Secretary*) மயூரா எஸ் ஜெயக்குமார் அவர்களை நேரில் சந்தித்து காங்கிரஸ் கட்சியின் நிர்வாகி அஸ்மத்துல்லா தலைமையில் சமர்ப்பித்துள்ளார்கள். அவருடன் அப்துல் பர்வேஸ், பேரிங்பாபு, திரு மெட்டல் சலீம், ஹாஜா , முஹம்மது சாதிக் , திரு பி கே நசீர், பீட்டர் , ரிஸ்வான் ஷெரிப் , சேதுபதி , மெல்வின் , சல்மான், பாலா மற்றும் சிலர் கலந்து கொண்டனர்..

### களியக்காவிளையில்

# கேரள பகுதியில் நிதி நிறுவனம் நடத்தி ரூ. 10 கோடி மோசடி; பாதிக்கப்பட்டவர்கள் புகார்



களியக்காவிளை, மார்ச், 20

கன்னியாகுமரி மாவட்டம்தமிழககேரளாஎல்லை களியக்காவிளை போலீசார் சோதனை சாவடி அருகே கோகுல் , கௌதம் என்ற பெயர்களில் நிதி நிறுவனங்கள் செயல்பட்டு வந்தது. நிறுவனங்களை ஜெயசேகர் மற்றும் அவரது மனைவி கலா ஆகிய இருவரும் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக நடத்தி வருகிறார்கள். இந்த நிதி நிறுவனங்களில் சாதாரண கூலித் தொழிலாளிகள், சமையல் வேலை செய்தவர்கள் மற்றும் திருமண மண்டபத்தில் கூலி வேலை பார்ப்பவர்கள் முதல் பெரிய தொழில் அதிபர்கள் வரை சேமிப்பு வைப்பு தொகை மற்றும் நகை அடகு வைத்திருந்தனர்.

இந்த நிலையில் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு இந்த நிதி நிறுவனங்களை பூட்டி விட்டு ஜெய சேகர் குடும்பத்தோடு தலைமறைவானார். இந்த நிலையில் இங்கு சேமிப்பு வைப்பு நிதி வைத்த 60க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர். நிதி நிறுவன உரிமையாளர் வீடு தமிழக பகுதியிலும், நிதி நிறுவனங்கள் கேரள பகுதியில் இருப்பதால் கேரள மாநிலம் பாறசாலை காவல் நிலையம் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கடந்த மாதம் 12 தேதி புகார் அளித்தனர்.

ஆனால் இது வரை இரு மாநில போலீசாரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆகவே தலைமறைவாக உள்ள நிதி நிறுவன உரிமையாளரை கண்டு பிடித்து நிதியை மீட்டு தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்து உள்ளனர்.

### நாகமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில்

# பாரத சாரண சாரணியர் இயக்கத்தில் சேர்ந்த 5ம் வகுப்பு மாணவர்கள்



கிருஷ்ணகிரி மாவட்டம் கெளமங்கலம் ஒன்றியம் நாகமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பாரத சாரண சாரணியர் இயக்கம் தொடங்கப்பட்டது இதில் மூன்றாம் நான்காம் ஐந்தாம் வகுப்புகளை சேர்ந்த 65 மாணவர்கள் சாரண சாரணியர் இயக்கத்தில் சேர்ந்து கொண்டனர்

இந்த தொடக்க விழாவில் கெலமங்கலம் வட்டார கல்வி அலுவலர்களான பால் ராஜ் மற்றும் லோகேஷ் ஆகியோர்கலந்து கொண்டனர் இவ்விழாவினை பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆசிர்வாதம் சிறப்பாக ஒருங்கிணைப்பு செய்தார் பள்ளியின் உதவி ஆசிரியை ராஜாமணி நன்றி உரை கூற விழா இனிதே நிறைவுற்றது'

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகளில் நாகமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது என வட்டார கல்வித்துறை அதிகாரி இந்த அரசு பள்ளியை பாராட்டினார்

### புதிய பாரதம் அமைப்புசாரா மற்றும் கட்டுமான தொழிலாளர்கள் நலச்சங்கம் சார்பில்

# ஓய்வூதியதாரர்கள் சங்க 2ம் ஆண்டு விழா மற்றும் மகளிர் தின விழா



வேலூர், மார்ச் 20

வேலூர் புதிய பாரதம் அமைப்புசாரா மற்றும் கட்டுமான தொழிலாளர்கள் நல மாநில சங்கம் சார்பில் ஓய்வூதியதாரர்கள் சங்கம் 2ம் ஆண்டு விழா மற்றும் மகளிர் தின விழா மாநில தலைவர் எம்.டி.வேல்முருகன்தலைமையில் மாநில அமைப்பு செயலாளர் கே.ஜி.சீனிவாசன் முன்னிலையில் நடைபெற்றது. இவ்விழாவில் வேலூர் மக்களவை உறுப்பினர் து.மு. கதிர் ஆனந்த், விஜடி துணைத்தலைவர் சங்கர் விசுவநாதன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினர். அகில இந்திய கட்டுமான அமைப்பு சாரா கூட்டமைப்பு நிறுவனத் தலைவர் ஆர்.டி.பழனி, நலவாரிய உறுப்பினர் பி.கணேசன் வாழ்த்தி பேசினர். உடன் காட்பாடி மேற்கு ஒன்றிய கழக செயலாளர்தணிகாசலம். ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன் கட்டுமான தொழிலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திருச்சி அரசு மருத்துவமனையில் நவீன இதய சிகிச்சை



திருச்சி, மார்ச். 20

திருச்சி மகாத்மா காந்தி அரசு மருத்துவமனையில் இதயத்துடிப்பு கோளாறுகளுக்கான எலக்ட்ரோ பிசியாலஜி ஸ்டடி மற்றும் அதனுடன் தொடர்புடைய சிகிச்சைகள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

மருத்துவமனை முதல்வர் குமரவேல் தெரிவித்த தகவலின்படி, 2022 முதல் 2026 வரை எட்டு பெண்கள் மற்றும் ஐந்து ஆண்கள் என மொத்தம் 13 நோயாளிகளுக்கு இந்த சிகிச்சை வெற்றிகரமாக அளிக்கப்பட்டுள்ளது.

### மணப்பாறையில்

# பாதை தொடர்பான தகராறு; இருவருக்கு மண்டை உடைப்பு



திருச்சி, மார்ச். 20

மணப்பாறை அருகே பண்ணப்பட்டி கிராமத்தில் வீட்டுக்குச் செல்லும் பாதை தொடர்பாக பழனிச்சாமி, சின்னச்சாமி இடையே ஏற்பட்ட தகராறில் இருவரும் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனர். இதில் பழனிச்சாமிக்கு தலையில் ஐந்து தையல்கள் போடப்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சின்னசாமியின் தங்கை லட்சுமிக்கும் தலையில் காயம் ஏற்பட்டது. இதுகுறித்து வையம்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து, பழனிச்சாமியைத் தாக்கிய மணிகண்டனை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கள்ளச்சாராயம் காய்ச்சி விற்ற 2 பேர் கைது



கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கிட்டம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 1 கௌதம் 24, 2 புவனேஷ் . ஆகியோர் சட்டவிரோதமாக கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பனை செய்தது தொடர்பாக கிருஷ்ணகிரி நகர காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். இந்நிலையில், கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவுப்படி, இருவரையும் கௌதம் மற்றும் புவனேஷ் ஆகியோர்கள் கள்ளச்சாராய தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

### இரமலான் விழாவுக்கான வாடிக்கையாளர்களை

# சென்னை நெக்ஸஸ் விஜயா மால் வரவேற்பு நிகழ்ச்சி




சென்னை, மார்ச் 20

சென்னையில் உள்ள நெக்ஸஸ் விஜயா மால், வாடிக்கையாளர்களுக்காக சிந்தனையுடன் வடிவமைக்கப்பட்ட ஒரு பண்டிகைக்கால அனுபவத்துடன் ரமலான் மாதத்தை கொண்டாடுகிறது. ரமலான் மாதத்தை மையமாகக் கொண்ட அலங்காரத்துடன் வடிவமைக்கப்பட்டு மார்ச் 21, 22 ஆகிய தேதிகளில், மாலை 3 மணி முதல், ஒரு நிகழ்ச்சித் தொகுப்பாளரின் தலைமையில் இந்த வணிக வளாகம் நடத்தவுள்ளது. இது வாடிக்கையாளர்களின் ஷாப்பிங் அனுபவத்திற்கு புத்துணர்ச்சியையும் உற்சாகத்தையும் சேர்க்கும். பார்வையாளர்கள் கொண்டாட்டங்களில் பங்கேற்க ஊக்குவிக்கும் வகையில், இந்த அமர்வுகள் கலகலப்பான சூழலுடனும், குடும்பத்தினர் அனைவரும் ரசிக்கக்கூடிய வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் அனைவருக்கும் அனுமதி இலவசம். இதில் வாடிக்கையாளர்கள் ஸ்பின் தி வீல்' ரமலான் கருப்பொருள் சார்ந்த விரைவு வினாடி வினா மற்றும் 'சொற்களை வரிசைப்படுத்தும்' சவால் போன்ற சுவாரஸ்யமான விளையாட்டுகளில் பங்கேற்கலாம். ஒவ்வொரு செயல்பாடும் சிறிய பரிசுகளை வழங்குவதோடு, உற்சாகமான சூழலையும் தக்கவைக்கிறது.

இந்தக் கொண்டாட்டங்களின் வாயிலாக, நெக்ஸஸ் விஜயா மால் மக்களை ஒன்றிணைத்து பொருட்களை வாங்கி, ரமலானின் மகிழ்ச்சியை எளிய அதே சமயம் ஈர்க்கக்கூடிய வகையில் பண்டிகைக் காலச் சூழலை உருவாக்க இலக்கு கொண்டுள்ளது.

### குமரி மாவட்டத்தில்

# தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் செலவின பார்வையாளர் ஆய்வு



நாகர்கோவில், மார்ச். 20

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் மற்றும் குளச்சல் சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் செலவின பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள சரண ஜோஸ் என்பவர் நேற்று முன்தினம் கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு வருகை தந்தார். கலெக்டர் அலுவலகத்தில் உள்ள நாஞ்சில் கூட்டரங்கில் 24 மணி நேரம் இயங்கி வரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் செயல்பாடுகளை அவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்களின் நேரடி ஒளிபரப்பு மற்றும் கண்காணிப்பு பணிகளை ஆய்வு செய்தார். பறக்கும் படைகள் மற்றும் நிலையான கண்காணிப்பு படைகளின் நடமாட்டத்தை ஜிபிஎஸ் கருவியின் மூலம் கண்காணிக்கும் முறையை சோதித்தார். தேர்தல் விதிமீறல்கள் தொடர்பாக பெறப்படும் புகார்கள் மற்றும் அதன் மீது எடுக்கப்படும் நடவடிக்கை குறித்தும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

தேர்தல் செலவினங்களை முறையாக கண்காணிக்கவும், எவ்வித முறைகேடுகளும் இன்றி ஜனநாயக கடமையாற்றுவதை உறுதி செய்யவும், கட்டுப்பாடு அறை பணியாளர்கள் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டுமென அவர் அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது தேர்தல் பிரிவு அதிகாரிகள் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்கள் உடன் இருந்தனர்.

### அச்சக உரிமையாளர்களுக்கு

# நாகர்கோவில் ஏஎஸ்பி லலித் குமார் அறிவுரை



நாகர்கோவில் மார்ச் 20

குமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி நாகர்கோவில் கூடுதல்காவல்கண்காணிப்பாளர் லலித் குமார் தலைமையில் உட்கோட்ட முகாம் அலுவலகத்தில் வைத்து நாகர்கோயில் உட்கோட்ட எல்லை பகுதிகளில் உள்ள அச்சக உரிமையாளர்கள் மற்றும் அதில் பணிபுரியும் பணியாளர்களுடன் தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகள் நடைமுறைக்கு வரப்பெற்றதால் தேர்தல் காலங்களில் அச்சகங்களில் எந்த மாதிரியான விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டது.

மேலும் வருகின்ற சட்டமன்ற தேர்தல் காலங்களில் தேர்தல் விதிமுறைகளுக்கு உட்பட்ட தங்கள் அச்சக பணிகளை செய்து கொள்ள வேண்டும்.

தேர்தல்நடத்தைவிதிமுறைகளின்படி, அச்சகங்கள் தேர்தல் தொடர்பான நோட்டீஸ்கள் மற்றும் போஸ்டர்களை அச்சிடும்போது, பிரசுரிப்பாளர் மற்றும் அச்சிடுபவரின் விவரங்களை கட்டாயம் குறிப்பிட வேண்டும். அச்சிடப்பட்ட ஆவணங்களின் நகல்களை உரிய ஆவணங்களுடன் மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். இவற்றுக்குத் தவறினால், தேர்தல் ஆணையத்தின் கடுமையான நடவடிக்கைகளுக்கு (சிறைத்தண்டனை உட்பட) உள்ளாக நேரிடும். அச்சிடும் பணிக்கு முன், பிரசுரிப்பவரிடமிருந்து உரிய அடையாளச் சான்றுடன் முறையாக நிரப்பப்பட்ட உறுதிமொழிப் படிவத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். விதிமுறைகளை மீறி அச்சிடப்பட்டால், சம்பந்தப்பட்ட அச்சகத்தின் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவே, தேர்தல் காலங்களில் அச்சக உரிமையாளர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன், தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றிச் செயல்பட வேண்டும் என அறிவுரை வழங்கினார்.



எம்.ஜி.ஆர்.புகழ் பாடும் இதயக்கனி மாத இதழின் வெள்ளி விழாவிற்கு வருகை புரிந்த பிரபல திரைப்பட பாடலாசிரியரும் ,எம்.ஜி.ஆரின் அமைச்சரவையில் அரசவைக் கவிஞராக பதவி வகித்தவருவமான கவியரசர் கண்ணதாசனாரின் புதல்வர் "அண்ணா துரை கண்ணதாசன் "அவர்களுக்கு உயிர் மெய்த் தமிழ்ச் சங்கம் ,உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் சார்பில் மாநிலத் தலைவர் "சேலத்து பாரதி"சொல்லரசர் சால்வை அணிவித்தார். பன்முகக் கலைஞர் ரா.சு.யுவராசா, மனித நேயம் மணி,எம்.ஜி.சத்தியமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

### மார்த்தாண்டம் அருகே

# 2 பேரை திருமணம் செய்த இளம் பெண் மாயம்

மார்த்தாண்டம், மார்ச். 20

மார்த்தாண்டம் அருகே மருதங்கோடு பகுதியைச் சேர்ந்தவர் தேவதாஸ் வசந்தா தம்பதிக்கு 2 மகள்கள் உள்ளனர். இவர்கள்2ம்மகள்விபிஷா(30)என்பவரை கொல்லங்கோடுபகுதியைசேர்ந்தஅனுஎன்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தனர். இவர்களுக்கு 11 மற்றும் 8 வயதில் இரண்டு மகன்கள் உள்ளனர். இந்த நிலையில் கணவன் மனைவியிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக விபிஷா கணவரை பிறந்து தனது பெற்றோர் வீட்டில் கடந்த 8 வருடங்களாக குழந்தைகளுடன் வசித்து வந்தார். இதையடுத்து பெற்றோர் விபிஷாவை காஞ்சாம்பு புத்தை சேர்ந்த சிஆர்பிஎப் வீரர் ரதீஷ் என்பவருக்கு 2 வது திருமணம் செய்து வைத்தனர். ரதீஷ் உத்தரபிரதேச மாநிலத்தில் பணியாற்றி வருகிறார். தற்போது 2 வது கணவர் ரதீஷையும் தனக்கு பிடிக்கவில்லை என்று விபி ஷா கூறியுள்ளார். இதை அடுத்து கடந்த 13ஆம் தேதி 2 மகன்களை அழைத்து கொண்டு விபிஷா வெளியில் சென்றுள்ளார். பின்னர் கொல்லங்கோட்டில் உள்ள முதல் கணவர் அனு வீட்டில் 2 மகன்களை விட்டுவிட்டு அங்கிருந்து மாயமானார். இது குறித்து அறிந்த பெற்றோர் அவரை பல்வேறு இடங்களில் தேடியும் கிடைக்காதால், மார்த்தாண்டம் காவல் நிலையத்தில் அவரது தாயார் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

### குமரி மாவட்டத்தில்

# மது பதுக்கி விட்டு 3 பேர் கைது; 43 பாட்டில்கள் பறிமுதல்

நாகர்கோவில், மார்ச். 20

குமரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் மது பாட்டில்பதுக்கிவிற்ற3பேர்கைதுசெய்யப்பட்டனர்.

திக்குறிச்சி பகுதியில் உள்ள ஒரு கடையில் சட்ட விரோதமாக மது பதுக்கி வைத்து விற்பனை செய்யப்படுவதாக மார்த்தாண்டம் போலீசாருக்கு தகவல் கிடைத்தது. போலீசார் அங்குள்ள நாகேந்திரன் (69) என்பவர் கடையில் சோதனை செய்தபோது அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 180 மில்லி அளவு கொண்ட 26 மது பாட்டில்களை பறிமுதல் செய்தனர். அவரை கைது செய்து, பின்னர் அவர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

இதுபோன்று தென்தாமரை குளம் போலீசார் கீழமணக்குடி பகுதியில் தோந்து சென்றனர். அப்போது அங்குள்ள கோழி இறைச்சிக்கடை அருகே சட்ட விரோதமாக ஒருவர் மது பதுக்கி வைத்து விற்பனை செய்வதை கண்டுபிடித்தனர். அவரிடம் விசாரித்தபோது சுப்பிரமணி (48) என்பது தெரிய வந்தது. சுப்பிரமணியை கைது செய்த போலீசார் அவரிடம் இருந்து 12 மது பாட்டில்களை பறிமுதல் செய்தனர்.

இதே போல் கன்னியாகுமரி போலீசார் நாச்சியார் குடியிருப்பு பகுதிகள் ரோந்து பணியின்போது அங்கு மது விற்பனை செய்து கொண்டிருந்த ராகவன் (54) என்பவரிடமிருந்து 5 மது பாட்டில்களை பறிமுதல் செய்தனர். மாவட்டத்தில் இதுபோன்று சட்ட விரோதமாக மது பாட்டில் விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என குமரி மாவட்ட எஸ்பி ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

### கன்னியாகுமரி அருகே

# கார் மோதி மூதாட்டி உயிரிழப்பு வாலிபர் மீது வழக்கு

கன்னியாகுமரி, மார்ச். 20

கன்னியாகுமரி அருகே கொட்டாரம் பகுதியை சேர்ந்தவர் வேலப்பன் மனைவி மனோன்மணி (78). இவர் தனது மகன் வீட்டில் வசித்து வந்தார். இந்த நிலையில் மனோன்மணி தனக்கு தெரிந்த நபரை பார்ப்பதற்காக வீட்டிலிருந்து வெளியே நடந்து சென்றுள்ளார். அப்போது நரிகுளம் காலனி பஸ் நிலைய சந்திப்பு பகுதியில் செல்லும் போது, அந்த வழியாக வேகமாக வந்த கார் ஒன்று மனோன்மணி மீது மோதியது. இதில் அவர் கீழே விழுந்து பலத்த காயமடைந்தார். அக்கப் பக்கத்தினர் அவரை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்குஅவரைபரிசோதித்தடாக்டர்கள்மனோன்மணி ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். கன்னியாகுமரி போலீசார் மூதாட்டி உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து மனோன்மணி மகன் சுரேஷ் என்பவர் கன்னியாகுமரி போலீசில் புகார் அளித்தார். போலீசார் விபத்து ஏற்படுத்திய அகஸ்தீஸ்வரம் பகுதி சேர்ந்த முருகன் மகன் நீல ராஜன் (23) என்பவர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### களியக்காவிளை அருகே

# சட்டக் கல்லூரி மாணவி திடீர் மாயம்; போலீசார் விசாரணை

மார்த்தாண்டம், மார்ச். 20

களியக்காவிளை அருகே தளச்சான் விளை என்ற இடத்தை சேர்ந்தவர் சிங் (47). இவர் முன்னாள் ராணுவ வீரர். இவரது 18 வயது மகள் ஒருவர் படந்தாலுமூட்டில் உள்ள ஒரு தனியார் சட்டக் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்தார்.

இந்த நிலையில் சம்பவ தினம் கல்லூரிக்கு செல்வதாக கூறிவிட்டுச் சென்ற மாணவி பின்னர் மீண்டும் வீட்டிற்கு திரும்பி வரவில்லை. இதனால் பதறிய உறவினர்கள் பல்வேறு இடங்களில் மற்றும் உறவினர்கள் வீடுகளில் தேடியம் மாணவி குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை.

இதையடுத்து மாணவியின் தந்தை சிங் களியக்காவிளை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து மாயமான மாணவி குறித்து விசாரித்து வருகின்றனர்.




கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல், 2026 நடைபெறுவதையொட்டி, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்.ச.தினேஷ் குமார் தலைமையில், இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் பொதுப்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள 51.ஊத்தங்கரை. தனி மற்றும் 52.பர்கூர் சட்டமன்ற தொகுதிகளுக்கு .அனில் குமார் சிங் , 53.கிருஷ்ணகிரி மற்றும் 54.வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதிகளுக்கு .சௌரவ் பாபு , 55.ஓசூர் மற்றும் 56.தளி சட்டமன்ற தொகுதிகளுக்கு .பண்வே ராகுல் துக்காராம் மற்றும் தேர்தல் செலவின பார்வையாளர்களாக 51.ஊத்தங்கரை .தனி. மற்றும் 52.பர்கூர் சட்டமன்ற தொகுதிகளுக்கு .சந்தோஷ்குமார், 53.கிருஷ்ணகிரி மற்றும் 54.வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதிகளுக்கு .D.சதீஸ் ஐ.ஆர்.எஸ். 55.ஓசூர் மற்றும் 56.தளி சட்டமன்ற தொகுதிகளுக்கு .ராகுல் சிங்கானியா , ஆகியோர் முன்னிலையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .பெ.தங்கதுரை மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### குளச்சல்

# சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி மையங்களில் அலுவலர் ஆய்வு



நாகர்கோவில்,மார்ச். 20

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற உள்ள தேர்தலை முன்னிட்டு தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து கன்னியாகுமரி மாவட்ட உதவி தேர்தல் அலுவலர் மற்றும் வருவாய் அலுவலர் பூங்கோதை குளச்சல் சட்டமன்ற தொகுதியில் தீவிர ஆய்வு மேற்கொண்டார்.

தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களுக்கு சென்று அவர் அங்கு வாக்காளர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் முறையாக செய்யப்பட்டுள்ளதா என ஆய்வு செய்தார். குறிப்பாக கடியப்பட்டணம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் சரல்விளை அரசு நடுநிலை பள்ளி ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களை நேரில் பார்வையிட்டார்.

தேர்தல் விதிமுறைகளை முறையாக பின்பற்றி எந்தவித முறைகேடுகள் இன்றி தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட அலுவலர் தெரிவித்தார். இந்த ஆய்வின்போது தேர்தல் பிரிவு அலுவலர்கள், வருவாய்த் துறை அதிகாரிகள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### ஈரோடு உழவர் சந்தையில்

# வாக்களிப்பது உங்கள் உரிமை விழிப்புணர்வு நிகழ்ச்சி; ஆட்சியர் தொடங்கி வைத்தார்



ஈரோடு மார்ச் 20

ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை"என்ற வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

ஈரோடு சம்பத் நகர் உழவர்சந்தையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் ஆட்சியர் பேசும்போது தெரிவித்ததாவது தேர்தலில் பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி இன்றைய தினம். வேளாண்மைத்துறையின் சார்பில், விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்திய தேர்தல் ஆணையம் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக நம்முடைய நாட்டில் தேர்தலை நியாயமாகவும் நேர்மையாக நடத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. ஈரோடு மாவட்டத்தில் இருக்கின்ற 8 சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து வாக்காளர்களும் தங்களுடைய பெயர் வாக்காளர் பட்டியலில் பெற்றுள்ளதை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும், 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு மற்றும் 40 சதவீதம், மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கும் அவர்களுடைய இல்லத்திற்கே சென்று தேர்தல் அலுவலர்கள் வாக்குப்பதிவு செய்வதற்கு தபால் வாக்கு வாக்குமுறையினையும் தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது. மேலும், 23.04.2026 அன்று சட்டமன்ற பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதால் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக இடம் அனைத்து நிறுவனங்களுக்கும் விடுமுறை அளிக்கப்படவுள்ளது. நியாயமான சுதந்திரமான எந்த விதமான தூண்டுதலும் இல்லாத ஒரு தேர்தலை நாம் நடத்துவதற்கு மக்களாட்சி முறையை நம்முடைய நாட்டில் நிறுவுவதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என தெரிவித்தார். தொடர்ந்து தேர்தல் தேதியை நினைவூட்டும் வகையில் 23.04.2026 என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை கையில் ஏந்தியும், விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

மேலும் ஈரோடு மாநகராட்சி சம்பத்நகர் உழவர் சந்தையில் 100% வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் காய்கறிகள் கொண்டு 100% வாக்களிப்போம் வாசகத்துடன் அமைக்கப்பட்டிருந்த தேர்தல் விழிப்புணர்வு ரங்கோலி கோலங்களை கலெக்டர் கந்தசாமி பார்வையிட்டார். மேலும் அவர் 100% வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் நடைபெற்ற விழப்புணர்வு நிகழ்ச்சியில் அமைக்கப்பட்டிருந்த செல்பி பாயிண்டில் புகைப்படம் எடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். தொடர்ந்து. உழவர் சந்தைக்கு வந்திருந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடம் தேர்தல் தொடர்பான துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

### கன்னியாகுமரியில்

# போலீசார் வாகன சோதனையில் 21 கிலோ கஞ்சா பறிமுதல்!

## 3 வாலிபர்கள் கைது



நாகர்கோவில் மார்ச் 20

கன்னியாகுமரி மாவட்டம் எஸ்பி ஸ்டாலின் உத்தரவு படி தக்கலை மது விலக்கு டிஎஸ்பி ராஜா, ஆய்வாளர் கருணாகரன் மற்றும் போலீசார் களியாக்காவிளை அருகே வாகன சோதனையில் ஈடுபட்டு வந்தனர். அப்போது மொபட்டில் வந்த நபரை தடுத்து நிறுத்தி விசாரணை நடத்திய போது அவர் முன்னுக்கு பின் முரணாக பேசினார். அவரது பேக்கை பரிசோதனை செய்த போது சுமார் 21 கிலோ கஞ்சா வைத்திருந்தது தெரிந்தது. இதனை அடுத்து வடசேரி பகுதியில் சேர்ந்த ஜெரின்ஜோஸ் (31) இவருடன் தொடர்பில் உள்ள மகேஷ் (32) பிரவீன் (34) ஆகிய மூன்று பேர் மீது வழக்கு பதிவு செய்து சிறையில் அடைத்தனர் குமரி மாவட்டத்தில் கஞ்சா போதைப்பொருள் புழக்கம் அதிகரிக்கும் நிலையில் போலீசார் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### மணப்பாறை

# கார் மோதி தனியார் நிறுவன காவலாளி பலி



திருச்சி, மார்ச். 20

மணப்பாறை அருகே நடுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 55 வயதான வெள்ளத்துரை, பாலப்பட்டி கேஸ் கம்பெனியில் இரவு நேர காவலராக பணிபுரிந்து வந்தார். நேற்று இரவு 11 மணியளவில் திருச்சிதிண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் சாலையை கடக்க முயன்றபோது, அடையாளம் தெரியாத கார் மோதி தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். வையம்பட்டி போலீசார் அவரது உடலை மீட்டு மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்து, விபத்தை ஏற்படுத்திய கார் ஓட்டுநர் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### திருவெண்ணெய்நல்லூர் அருகே

# டிப்பர் திருடியவர் கைது



திருவெண்ணெய்நல்லூர்.மார்ச். 20

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் சுந்தர் ரெட்டியார் நகரை சேர்ந்தவர் ஆனந்தன் (45), விவசாயி. இவரது டிராக்டர் கடந்த 11ந் தேதி இரவு வீட்டின் முன்பு நிறுத்தி வைத்திருந்த டிராக்டர் மற்றும் டிப்பரில் டிப்பரை மட்டும் மர்ம நபர்கள் திருடி சென்றனர். இதுகுறித்து ஆனந்தன் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து திருடிச் சென்ற மர்ம நபரை தேடி வந்தனர்.

இந் நிலையில் திருவெண்ணெய்நல்லூர் அருகே சேத்தூர் கிராமம் மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த நாராயணசாமி மகன் பாலமுருகன் (45), என்பவரை போலீசார் கைதுசெய்துவிசாரித்தனர் விசாரணையில் டிப்பரை திருடியதை ஒப்புக்கொண்டதை அடுத்து டிப்பரை பறிமுதல் செய்த போலீசார் அவர் மீது வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within three months thereafter, I **Venkatesh.S**, S/o V.S.Sivakumar, D.O.B: 23.12.1998, aged 27, permanently residing at 41/17b, sakthi garden, asambu road,vadasary, Nagercoil, kanyakumari district, Tamilnadu-629001. Intend having my enrollment as an advocate moved before the bar council of Tamilnadu, Bar council buildings, high court campus, chennai - 104. Those who have any valid objections, may notify the same to the bar council within 10 days

**Venkatesh S.**

# 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வாகனம்

## கலெக்டர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்




தர்மபுரி, மார்ச். 20

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு வாகனத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ், கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டு தலின் படி, வருகின்ற 23 ஏப்ரல் 2026 அன்று நடை பெற உள்ள தேர்தலில் தவறாமல் வாக்களிப்பேன் என்றும் என் வாக்கு விற் பனைக்கல்ல என்றும் உறுதி அளித்து வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இன்றைய தினம் விழிப்புணர்வு வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, தேர்தல் திருவிழா, தமிழகத்தின் பெருவிழா தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்போம், என் வாக்கு விற்பனைக்கு அல்ல என்ற அவசியம் குறித்து அனைத்து பொது மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் செல்பி பாயிண்டு( ) அமைக்கப்பட்டதில் பொதுமக்கள் புகைப்படம் எடுத்துக்கொண்டதை மாவட்ட தேர்தல் அலுவ லர் / மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ் பார்வையிட்டார்கள்.

தொடர்ந்து, தமிழ் நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, தேர்தலில் 100 சதவீதம்

வாக்களிப்போம், வலு வான ஜனநாயகத்தை உரு வாக்குவோம் என்ற அவசியம் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆட்டோக்களில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ், ஒட்டுவில்லை களை ஒட்டி விழிப் புணர்வு ஏற்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சுற்றுலா பயணம் செய்யும் வாகனங்களில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ், ஒட்டுவில்லைகளை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

மேலும், வருகின்ற தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலில் தருமபுரி மாவட்டத்தில் 100 சதவிகிதம் வாக்குப்பதிவை உறுதிசெய்திட பல்வேறு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ், தரிவித்துள்ளார்கள். இந்நிகழ்வுகளின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.மகேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மகளிர் திட்ட அலுவலர் சு.சுந்தர்ராஜன், தேர்தல் நடத்தும் அலுவலர் இரா. காயத்ரி, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் சி.க.ஜெயதேவ்ராஜ், செய்தி மக்கள் தொட ர்பு அலுவலர் வெ.லோக நாதன், வட்டாட்சியர் ஜெ. சுகுமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவ லர்கள் மற்றும் பொதுமக் கள் கலந்துகொண்டனர்.

# 6 சட்டபேரவை தொகுதிகளுக்கு தேர்தல் பொது பார்வையாளர்கள் மற்றும் செலவின பார்வையாளர்கள் நியமனம்

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் தகவல்



கிருஷ்ணகிரி, மார்ச். 20

தமிழகத்தில் ஏப்ரல் 23ம் தேதி சட்டப்பேரவை தேர்தல் ஒரே கட்டமாக 234 தொகுதிகளுக்கும் நடைபெற உள்ளன. இதையடுத்து சட்டப் பேரவை தேர்தல் அமைதியான முறையிலும், சுமூகமாகவும் நடைபெறுவதை உறுதி செய்யவும், வேட்பாளர்களின் தேர்தல் செலவுகளை கண்காணிக்கவும்,

கிருஷ்ணகிரி மாவட்டத் தில் உள்ள 6 சட்டப் பேரவை தொகுதிகளுக்கு இந்திய தேர்தல் ஆணையம், தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் மற்றும் செலவின பார்வை யாளர்கள் நியமிக்கப்பட் டுள்ளனர்.

அதன்படி 51. ஊத்தங்கரை (தனி) மற்றும் 52. பருகூர் சட்டமன்ற தொகுதிகளுக்கு பொதுப் பார்வையாளராக அனில் குமார் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது தொடர்பு அலுவல ராக ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற்பொறியாளர் ஜெகதீஸ்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

53. கிருஷ்ணகிரி மற் றும் 54. வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதிகளுக்கு பொதுப்பார்வையாள ராக சௌரவ் பாபு சிங் ஹால் நியமிக்கப் பட்டுள்ளார். இவரது தொடர்பு அலுவலராக ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற்பொறியாளர் சுப்ரமணி நியமிக்கப்பட்டுள் ளார். 55. ஓசூர் மற்றும் 56. தளி சட்டமன்ற தொகுதிகளுக்கு பொதுப்பார்வையாளராக பண்வே ராகுல் துக்காராம் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது தொடர்பு அலுவ லராக ஊரக வளர்ச்சித் துறை உதவி செயற்பொறி யாளர் சம்பத் நியமிக்கப் பட்டுள்ளார். அதேபோல, 51. ஊத்தங்கரை (தனி) மற் றும் 52. பருகூர் சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் செலவின பார்வையாளர்களாக சந்தோஷ்குமார் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது தொடர்பு அலுவல ராக துணை வட்டார வள ர்ச்சி அலுவலர் குமரேசன் நியமிக்கப்பட்டுள்ளார். 53. கிருஷ்ணகிரி மற்றும் 54. வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் செலவின பார்வையாளர் களாக னு.சதீஸ் நியமிக் கப்பட்டுள்ளார். இவரது தொடர்பு அலுவலராக துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஜீவா நியமிக்கப்பட்டுள்ளார்.

55. ஒசுர் மற்றும் 56. தளி சட்டமன்ற தொகு திகளுக்கு தேர்தல் செலவின பார்வையாளர்களாக ராகுல் சிங்கான்யா நியமிக்கப்பட்டுள்ளார். இவரது தொடர்பு அலுவலராக வட்டார வளர்ச்சி அலுவலர் முகமத் சிராஜீதின் நியமிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட க்லெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்




தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, சேலம் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில், (17.03.2026) 100% வாக்களிப்பதை வலியுறுத்தி விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.ரவிக்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி வாணிஈஸ்வரி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### தஞ்சாவூர்மாவட்ட சட்ட மன்றத் தேர்தலில்

# 100சத வீதம் வாக்களிக்க வேண்டியதை வலியுறுத்தி விழிப்புணர்வு கோலப் போட்டி



தஞ்சாவூர் மார்ச் 20

தஞ்சாவூர் மாவட்டத்தில் சட்டப்பேரவை தேர்தலை யொட்டி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது .அந்த வ கையில் தஞ்சாவூர்மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் சட்டமன்ற பொதுதேர்தலை முன்னி ட்டு வாக்காளர்கள் நேர்மையாக 100 சதவீதம் வாக்களிக்க வேண்டிய தை வலியுறுத்தி விழிப்பு ணர்வு கோலம் போட்டி கள் நடந்தது.

இப்போட்டியைகலெக்டர் பிரியங்கா பங்கஜம், பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி தொகுதி களுக்கான செலவினை பார்வையாளர் ஹேமங் பூகன் ஆகியோர் பார்வையிட்டனர். இந்த விழிப்புணர்வு ரங்கோலி போட்டியில் சுமார் 50 க்கும் மேற்பட்ட அங்கன் வாடி பணியாளர்கள் கலந்து கொண்டு நேர்மையாக 100 சதவீதம் வாக்களிக்க வேண்டிய தை வலியுறுத்தி வண்ணக் கோலமிட்டு பொதுமக்களுக்கு விழிப்பு ணர்வு ஏற்படுத் தினர். நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர்தியாகராஜன், சமூக பாதுகாப்பு திட்டம் உதவி கலெக்டர் சவுமியா, துணை கலெக்டர் (பயிற்சி) கமலேஷ் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில்

# தேர்தல் பணிகளை கண்காணிக்கவும் வேட்பாளர் செலவுகளை கண்காணிக்கவும், பொது பார்வையாளர் நியமிக்கப்பட்டார்

## மாவட்ட தேர்தல் அலுவலரும் கலெக்டர் தகவல்



தஞ்சாவூர் மார்ச். 20

தஞ்சாவூர் மாவட்ட தேர்தல் அலுவலரும், மற்றும் மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் வெளியிட்டுள்ளசெய்திகுறிப்பில் கூறியிருப் பதாவது: தஞ்சாவூர் மாவட்ட தேர்தல் பணிகளை கண்காணிக்கவும், வேட்பாளர்களின் செலவுகளை கண் காணிக்கவும், 8 சட்ட மன்றத்தொகுதிக்கு 2 தொகுதிகளுக்கு ஒரு பொதுபார் வையாளர் ஒரு செலவீன பார்வை யாளர் மற்றும் 8 சட்ட மன்ற தொகுதிகளுக்கும் ஒரு காவல் பார்வையா ளர் என இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ளனர். திருவிடைமருதூர் (தனி ),கும்பகோணம் தொகுதிகளுக்கான பொது பார்வையாளர் அருண்குமார் இ.ஆ.ப மற்றும் செலவின பார்வையாளர் சோமண்ணா ஐ.ஆர். எஸ்.,பாபநாசம் மற்றும் திருவையாறு தொகுதிகளுக்கான பொது பார்வையாளர் கேஷ்வேந்திர குமார் இ.ஆ.ப ,தஞ்சாவூர் மற்றும் ஒரத்தநாடு தொகுதிகளுக்கான பொது பார்வையாளர்தினேஷ் செஹரா இ.ஆ.ப ,செலவின பார்வையாளர் அஸ்வணி குமார் சிங்கால் ஐ.ஆர்.எஸ், பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி தொகுதிகளுக்கான செலவின பார்வையாளர் ஹேமங்ஃபூகன் ஐ.ஆர்.எஸ் ,மற்றும் அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் காவல் மேற், பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார்.

### காரமடையில்

# புதிய தமிழ்நாடு மெர்கண்டைல் பேங்க் கிளை திறப்பு விழா




கோவை, மார்ச். 20

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், காரமடையில் உள்ள வடக்கு ரத வீதி பகுதியில் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியின்ஏ.டி.எம்/சி.ஆர். எம் வசதியுடன் கூடிய 619வது புதிய கிளை திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த புதிய கிளையை நிர்வாக பங்குதாரரும், ஸ்ரீ வெங்கடேஸ்வரா புட் ப்ராசசிங் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனர் எம்.கே.பொன்னுசாமி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இதில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்ட கிளையின் கட்டிட உரிமையாளர்கள் நந்தினி ராஜேஷ், காயத்ரி சுரேஷ், ஆஷிகா ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி வைத்து சிறப்பித்தார்கள். இக்கிளையின் துவக்கப் பணிகளை முன்னாள் எம்.எல்.ஏ.,க்கள் ஏ.கே.செல்வராஜ், ஓ.கே.சின்னராஜ், முன்னாள் காரமடை பேரூராட்சி மன்ற தலைவர் கே.ஆர். கிருஷ்ணன் ஆகியோர் தொடங்கி வைத்தார்கள். புதிய ஏ.டி.எம்.பிரிவினை மக்கள்பயன்பாட்டிற்குகாரமடைசௌமியா மருத்துவமனை நிறுவனர் டாக்டர் என். எஸ்.ஜெயராமன் துவக்கி வைத்தார். விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் மண்டல தலைவர் எர்னெஸ்ட் வசீகரன் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க காரமடை நீலகிரி கார்டன் ரியல் எஸ்டேட் நிறுவனர் புருஷோத்தமன், எஸ்.எம்.டி.குருப் ஆப் கம்பெனிஸ் நிர்வாக இயக்குனர் எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், தாசபளஞ்சிகம் கே.பி.வி.கோவிந்தன், கட்டிட நிறுவனர்கள் ராஜேஷ், சுரேஷ் என பல்வேறு சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இறுதியில் கிளை மேலாளர் எஸ்.பாண்டி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

### தர்மபுரி மாவட்டத்தில்

# அனைத்து நாடுகள் மகாஜன சங்கம் சார்பில் 29ம் ஆண்டு யுகாதி திருவிழா




தருமபுரி மார்ச் 20

தருமபுரி மாவட்ட அனைத்து நாடுகள் மகாஜன சங்கம் சார்பில் 29 ம் ஆண்டு யுகாதி திருவிழாவை முன்னிட்டு தருமபுரி மாவட்ட பள்ளி மாணவ,, மாணவிகள் 2025 ம் ஆண்டு தேர்வு 10 ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு ரொக்க பணம் , பரிசு பணம் நிகழ்வு மற்றும் நாயுடு திருமண தகவல் மையம் துவக்க விழா தருமபுரி செங்குந்தர் திருமண மண்டபத்தில் தருமபுரி மாவட்ட அனைத்து நாயுடுகள் மகாஜன நல சங்கத்தின் மாவட்ட செயலாளர் நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

தீர்மானங்கள் :

அரசு நடத்தும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளதால் தமிழ் மொழிக்கு அடுத்த தெலுங்கு மொழி பேசும் அனைத்து நாயுடு மக்களும் தாய்மொழி தெலுங்கு என தெரியப்படுத்தி அரசு ஆய்வாளர்களின் பதிவேட்டில் குறித்துக் கொள்ளும்படி உறுதி ஏற்கப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து தாலுக்காஅலுவலகத்திலும்குடும்பத்துடன் கலந்து கொண்டு அனைவருக்கும் யுகாதி திருவிழாவில் "சிறப்பு விருந்து" அளிக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் சித்ரா மெடிக்கல்ஸ், D.G வெங்கடேசன், பொருளாளர் R. ராஜா, கௌரவத் தலைவர் K.பாண்டுரங்கன், தலைமை ஆலோசகர் R.வெங்கடேஷ் பாபு, கலைமகள் பள்ளி R.நடராஜன் E.குப்புசாமி A.எத்திராஜ் D.கணேஷன் E.ஏகாம்பரம் K.சீனிவாசன் ஆகியோர் உடனிருந்தனர்.

**DHINA TAMIL DAILY** : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.